Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 10

ஈழநாடு

EELA NADU

போன்: 389 National TAMIL DAILY தேசிய தினசரி தபாற் பெட்டி எண்: 49

மலர் 3 யாழ்ப்பாணம். சார்வரி பங்குனி 7-ஆம் நாள் ஷவ்வால் 2 (20-3-61) திங்கட்கிழமை இதழ் 32

STAFF COPY

மன்னரில் மறியல் இயக்கம் ★ பங்கீட்டரிசிபற்றி அரசாங்க அதிபர் ★ 'கூப்பன்கடை'களும் நிராகரித்தன ★ மீண்டும் பாடசாலை பிரச்சினை

சத்யாக்கிரகம்

2வதுமாத ஆரம்பம்

யாழ்ப்பாணத்தில் அவசரகாலப் பிரகடனம்?

நகரெங்கும் பலத்த வதந்தி

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணத்தில் கச்சேரிமுன் சத்யாக்கிரகம் ஆரம்பித்து ஒரு மாதம் முடிந்து இன்று இரண்டாவது மாதம் ஆரம்பம்.

பங்கீட்டரிசி விநியோகத்துக்குத் தடை ஏற்பட்டுள்ளதைக் காரணம்கூறி வடமாகாணத்தில் மட்டும் எச்சமயத்திலும் அவசரகாலப் பிரகடனம் செய்யப்படலாமென்று நகரெங்கும் பலத்த வதந்தி உலவுகின்றது.

தமிழரசுக் கட்சியின் நேரடி நடவடிக்கைத் திட்டங்களில் இரண்டாவது அம்சமான மறியல் இயக்கம் இன்று மன்னரில் ஆரம்பமாகிறது.

மறியல் இயக்கம் மன்னரில் விரைவில் ஆரம்பிக்கப்பட வேண்டுமென்ற மன்னர்த் தொகுதி மக்களுக்கு 20-ந் திகதி ஆரம்பிக்கலாமென கட்சியின் மேலிடம் ஏற்கெனவே அறிவித்திருந்தது. இத்திட்டத்தை மாற்றி மறியல் இயக்கத்தைப் பின்போட முடியுமானால் முயற்சி செய்யும்படி, தெரிவித்த நல்லூர் எம். பி. டாக்டர் ஈ. எம். வி. நாகநாதனை கட்சியின் மேலிடம் மன்னருக்கு அனுப்பிவைத்துள்ளது.

20-ந் திகதி மறியல் இயக்கம் ஆரம்பிக்கலாமென்று முன்னர் கொடுத்த உத்தரவை மாற்றுவது முடியாத காரியமாகவே இருக்குமென்று தெரிவித்து விட்டு டாக்டர் நாகநாதன் மன்னருக்குப் புறப்பட்டுச் சென்றுள்ளார்.

(6ம் பக்கம் பார்க்க)

2 நேரம் 2 நிமிஷ வழிபாடு

எஸ்.ஜே.வி. வேண்டுகோள்

யாழ்ப்பாணம், திங்கள்

தமிழர் உரிமைப் போராட்டம் வெற்றி பெறுவதற்காக சகல மக்களும் அவர்கள் எச்சமயத்தைச்சேர்ந்தவராலுலும் ஒரே நேரத்தில் இரண்டு நிமிஷம் இறைவனை வழிபடல் வேண்டுமென்று திரு எஸ். ஜே. வி. செல்வநாயகம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தினசரி நண்பகல் 12 மணிக்கும், மாலை 6மணிக்கும் ஆலயங்களிலும், தேவாலயங்களிலும் மணியோசை ஒலிக்குமென்றும் இச்சமயத்தில் ஒவ்வொருவரும் இரண்டு நிமிஷத்துக்கு மௌனமாக இறைவனை வழிபடவேண்டுமென்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

கதாகாலட்சேபம்

வண்ணை சிவன் கோவிலில் நேற்று திரு. சிவ அன்பு, "நந்தனர்" கதாகாலட்சேபம் செய்தார். இன்று மாலை "நால்வர்" சரித்திரம்.

மற்றவரும் மரணம்

யாழ்ப்பாணம், திங்கள்

கலட்டிச் சந்தியில் சில தினங்களுக்குமுன் இராணுவ லொறியும் மோட்டார் கார் ஒன்றும் மோதியதில் ஒருவர் உடனே மாண்டார். இவ்வீபத்தில் பலத்த காயமடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த திரு. என். மகாதேவாவும் சென்ற சனிக்கிழமை இரவு ஆஸ்பத்திரியில் காலமானார். விபத்தில் காயமடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட திரு. மகாதேவா மரணமடையும்வரை சய உணர்வு பெறவில்லை.

திரு. மகாதேவா காலமான செய்தியறிந்து ஆஸ்பத்திரிக்கு வந்த கேனல் உடுகமையும் காப்டன் ஜோர்ஜும் திருமதி மகாதேவாவிடம் தங்கள் அனுதாபத்தைத் தெரிவித்துக் கொண்டனர். திரு. மகாதேவா காட்டிலாகாவில் சூபாஸ்தாவாகப் பணியாற்றிவந்தார்.

'நாங்கள் கேட்பது தமிழ் வாழ்வு'

ஊர்காவற்றுறை, திங்கள்

நாட்டிலே இன்று நாம் கேட்பது நீதியானது. நாங்கள் எங்கள் தமிழ் வாழ்வைக் கேட்கின்றோம். எங்கள் மொழியுரிமையைக் கேட்கின்றோம். இன்றைய அரசாங்கம் செவி சாய்க்காமல் இராணுவத்தினரையும் பொலிசாரையும் கொண்டு எங்களை அடக்க முயற்சிக்கிறது.

'கச்சேரிக்குவந்து அரிசி உத்தரவுபெற முடியாது'

அரசாங்க அதிபருக்கு கூப்பன் கடைகள் பதில்

யாழ்ப்பாணம், திங்கள்

பங்கீட்டரிசி பெறுவதற்கான அனுமதிச் சீட்டுக் களைக் கச்சேரியில் வந்து பெற்றுக்கொள்ள வேண்டுமென்று விதானைமார் மூலம் அரசாங்க அதிபர் விடுத்த உத்தரவை தனிப்பட்ட வர்த்தகர்களும் கூட்டுறவுச் சங்கக்கடை மனேஜர்மாரும் நிராகரித்துவிட்டனர்.

கூப்பன் துண்டுகளை தனது காரியாலயத்துக்குக் கொண்டு வந்து கொடுத்து பங்கீட்டரிசி பெறுவதற்கான அனுமதிச் சீட்டைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று பங்கீட்டரிசி விற்பதற்கான உத்தரவாதம் பெற்ற தனிப்பட்ட வியாபாரிகளுக்கும் கூட்டுறவுச் சங்கக் கடைகளுக்கும் அரசாங்க அதிபர் விதானைமார் மூலம் கடிதம் அனுப்பியிருந்தார்.

அரசாங்க அதிபர் அனுப்பிய இந்தக் கடிதம்பற்றி தனிப்பட்ட வியாபாரிகளும் கூட்டுறவுச்சங்கக் கடை மனேஜர்களும் சேற்றுமாலை நாவலர் மண்டபத்தில் கூடி ஆராய்ந்தனர்.

மறுப்பும் கண்டனமும்

கூட்டுறவுச் சங்கக்கடை மனேஜர்களும் தனிப்பட்ட வியாபாரிகளும் கச்சேரிக்குச் சென்று பங்கீட்டரிசி விநியோகத்திற்கான அனுமதிச் சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ள முடியாதென்று கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பெற்றது.

வழக்கம்போல் கூட்டுறவுச் சங்க சமாஜங்கள்மூலமே பங்

(6 ம் பக்கம் பார்க்க)

கல்வி மந்திரியின் புதிய உத்தரவு

கத்தோலிக்க மேலிடம் ஆலோசனை

கொழும்பு, ஞாயிறு

கட்டணம் வசூலிக்காத தனிப்பட்ட பாடசாலைகளாகவுள்ள பெரிய கல்லூரிகளைச் சேர்ந்த ஆரம்ப பாடசாலைகளை அரசாங்கம் எடுத்துக் கொள்ளும் கல்வி அமைச்சரின் புதிய உத்தரவு பற்றி கத்தோலிக்க மேலிடத்தினர் இவ்வாரம் கூடி ஆராய்வரென்று தெரிய வருகிறது.

கட்டணம் வசூலிக்காமலும் உதவி நன்கொடை பெறாமலும் பாடசாலைகளை நடத்துவதைக் கூட மந்திரியின் புதிய உத்தரவு தடை செய்யக்கூடுமென்று கத்தோலிக்கர் பலர் கருதுவதாக அறியப்படுகிறது.

முன்பு செய்ததுபோல் பாடசாலைக் கட்டிடங்களை பெற்றோர் மீண்டும் ஆக்கிரமிப்பதுதான் சரியென்று சிலர் கருதுகின்றனராம். கல்வி மந்திரியின் புதிய உத்தரவுக்கு கத்தோலிக்க மேலிடம் முதலில் பிரதமருக்கும், கல்வி மந்திரிக்கும் ஆட்சேபம் தெரிவிக்குமாம்.

தென்னபிரிக்க பிரதமர் வெர்வூட் குற்றச்சாட்டு

பிரதமர் சிறிமா பதில்

லண்டன், மார்ச் 19

இலங்கையிலும் இனவேற்றுமை இருந்துவருகின்றதெனத் தென்னபிரிக்கப் பிரதமர் வெர்வூட் குற்றம் சுமத்தியதை இலங்கைப் பிரதமர் திருமதி பண்டாரநாயக்கா காமன் வெல்த் பிரதமர்கள் மகாநாட்டில் மறுத்தார்.

இலங்கையைத் தென்னபிரிக்காவுடன் ஒப்பிடுவதுமுற்றிலும் தவறெனத் தெரிவித்த பிரதமர் சிறிமா, இலங்கையில் இன

(6-ம் பகக்ம் பார்க்க)

ஊர்வலத்தில் அமைதி, கட்டுப்பாடு தெருவெல்லாம் தேசியகீதம்

யாழ்ப்பாணம், திங்கள்

இப்பொழுது ஊர்வலங்களெல்லாம் தலைவர் எஸ். ஜே. வி. யின் வேண்டுகோளுக்கமைய அமைதியாகவே நடைபெற்று வருகின்றன.

நேற்று கொட்டடி, அச்சுவேலி, வட்டுக்கோட்டை, பருத்தித்துறை ஆகிய இடங்களிலிருந்தும் மறறும் பல இடங்களிலிருந்தும் வந்த ஊர்வலங்கள் இதற்கோர் எடுத்துக்காட்டு.

'ஒழிக, வீழ்க' என்ற வார்த்தைகள் இன்றி 'வாழிய செந்தமிழ் வாழ்க நற்றமிழர்' போன்ற தேசிய கீதங்களும் தெய்வ மணங்கமழும் பக்திப் பாடல்களும் ஒலித்தன.

மொழி உரிமைப் போராட்டத்தில் தாய்மார்கள் அதிக

(6 பக்கம் பார்க்க)

அறம்காக்கும் பெண்கள் தமிழ்காக்க வந்தனர்

வண்ணை மாதர்களின் ரூ. 1139 காணிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 20

வண்ணை மாதர்கள் சென்ற சனிக்கிழமை மாலை பெரிய ஊர்வலமாக, திருமதி. அமிர்தலிங்கம் தலைமையில் புறப்பட்டு மௌனமாக பல வீதிகள் வழியே கச்சேரிக்குச் சென்று தலைவர் எஸ். ஜே. வி. யிடம் ரூ. 1139 அடங்கிய பணமுடிப்பைக் கொடுத்தனர். "அறம் காக்கும் பெண்களே, தமிழ் காக்க வாரீர்" என்ற சுலோகம் பொறிக்கப்பட்ட கொடியுடன் சென்ற ஊர்வலத்தில் 1000 பெண்களுக்குமேல் கலந்து, சுமார் அரைமணி நேரம் சத்தியாக்கிரகத்தில் கலந்துகொண்டு அமைதியுடன் திரும்பினர்.

இவ்வாறு நாரந்தனைக் கிராமச் சங்கத் தலைவர் திரு. சு. கதிரித்தம்பி பொதுமக்களுக்கு வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

மணிவாக்கு

ஆண்டவர் காட்டும நெறி அஹிம்ஸையும் சத்தியமும்கூடிய நெறியேயாகும். அஹிம்ஸையாகவும், சத்தியமாகவும் கடவுளை நான் வணங்குகின்றேன்.

—காந்திஜி

ஈழநாடு
EELA NADU

யாழ்ப்பாணம் சார்வரி ஆண்டு பங்குனி மீ 7 உ (20-3-61)

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone: 389.

ஒருமாதம்

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சத்தியாக்கிரகம் ஆரம்பித்து நேற்றுடன் ஒருமாதம் முடிந்து விட்டது. சென்ற ஒருமாத காலமாக இயக்கம் தீவிரமாகப் பரவி வந்துள்ளதெனினும், இவ்விருமாகாணங்களிலும் மக்களிடையே வகுப்புத்துவேஷமோ, பலாத்காரமான செயல்களோ, எதுவுமில்லாமல், அஹிம்ஸா நெறியில் எல்லாம் அமைதியாக நடப்பதாய், இங்கு வந்து பார்க்கும் சிங்களத் தலைவர்களும் வர்த்தகர்களுமே கூறிப் பாராட்டுகிறார்கள்.

ஆனால் இதற்கு நேர்மாறாக வெளிமடை பிரதிநிதி வகுப்புத் துவேஷப் பிரசாரத்தை கொழும்பில் நேற்று ஆரம்பித்துள்ளதுடன், இப்பிரசாரத்தை சத்தியாக்கிரகம் முடியும்வரை தொடர்ந்து செய்யப்போவதாகவும் அறிவித்துள்ளாராம். இன்னும் சிலர் வகுப்பு வாதத்தைக் கிளப்பி விடும். முறையில் பேசியும் எழுதியும் வருகின்றார்கள். இத்துவேஷப் பிரசாரம் மேலும் நடைபெற அனுமதிக்கப்படுமானால் நாட்டில் 1958-ம் வருடம் நடந்த பயங்கர சம்பவங்கள் மீண்டும் ஏற்பட்டுவிடக் கூடும்.

சென்ற ஒருமாத காலமாக இவ்விருமாகாணங்களிலும் சத்தியாக்கிரகம் நடைபெற்றாலும் இப் பகுதிகளில் சிங்கள வர்த்தகர்களைப் பகிஷ்கரிக்க வேண்டுமென்ற பேச்சே எழவில்லை. அவர்கள் நிம்மதியாகத் தங்கள் வர்த்தகத்தை எப்போதும் போல் நடத்துகின்றார்கள். சில இடங்களில் தமிழரின் நியாயமான கோரிக்கைகளுக்கு அனுதாபம் தெரிவித்து சத்தியாக்கிரகத்திலும் அவர்கள் ஈடுபட்டுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. பொதுமக்களிடையே வகுப்புத் துவேஷம் சிறிதுமில்லை. தமிழரின் கோரிக்கையில் நியாயமுள்ளதை சில சிங்களப் பெருமக்களும் உணர்ந்து தமிழருக்கு நியாயம் வழங்க வேண்டுமென்று பத்திரிகைகளிலும் பகிரங்கமாக எழுதிவருவது வரவேற்கத்தக்க ஒரு நல்ல அறிகுறியாகும்.

இலங்கைச் சம்பவங்களை உலகம் கவனித்து வருகிறது. இலங்கையிலும் இனவெறியுள்ளதாக காமன்வெல்த் பிரதம மந்திரிகள் மகாநாட்டில் தென்னபிரிக்க பிரதமர் வெர்வூட் குற்றம் சாட்டினர். இதை, பிரதமர் சிறிமா மறுத்தார். இலங்கையில் இனவேற்றுமை இல்லை என்றும், மொழிப் பிரச்சினையே இது என்றும், 1958-ல் சில பொறுப்பற்ற தீவிரவாதிகள் மொழிக் கலவரங்களைக்கிளப்பி விட்டதாயும், அரசாங்கம் பாரபட்சமின்றி நடந்து அமைதியையும் ஒழுங்கையும் நிலை நாட்டியதாயும் சமாதானம் கூறினர். ஆனால் "பொறுப்பற்ற தீவிரவாதிகள்" மீண்டும் இங்கு மொழிப்பிரச்சினையை, இனப்பிரச்சினையாக்க முயலுகின்றனர். மொழிப் பிரச்சினையைச் சுமுகமாகத் தீர்க்க எவ்வித முயற்சியும் அரசாங்கம் செய்யவில்லை. இந் நிலையில் 1958-ம் ஆண்டு நடந்தது போன்ற கலவரங்கள் மீண்டும் ஏற்படக் கூடிய ஆபத்து உருவாகி வருகிறது.

அவ்வித ஆபத்துக்கு இடம் கொடாமல் இப்பிரச்சினையை சுமுகமாகத் தீர்க்க வேண்டிய பொறுப்பு சிறப்பாக அரசாங்கத்தையே சேரும். பிரதமர் சிறிமா இன்னும் இரண்டொரு நாட்களில் இங்கு திரும்பிவிடலாம். காமன்வெல்த் பிரதமர்கள் மகாநாட்டில் கலந்து ஜனநாயகம், மனித உரிமை முதலியவற்றைப்பற்றி கேட்டதின் பயனை அவர் உள்ளம் விரிவடைந்திருக்க வேண்டும். எப்படியும், இங்கு நிலைமை மேலும் மோசமாகி வகுப்புக் கலகங்கள் ஏற்படாமல் தடுக்கவும், மொழிப்பிரச்சினையை நல்ல படியாகத் தீர்க்க வழி செய்யவும் அவர் தக்க நடவடிக்கை எடுக்கக் கடமைப்பட்டிருக்கின்றார்.

குமாஸ்தாக்கள் இடமாற்றம்

யாழ்ப்பாணத்திலே மறியல் நடைபெறும் அரசாங்க அலுவலகங்களில் கடமையாற்றும் எல்லா அரசாங்க ஊழியர்களையும் தூர இடங்களுக்கு தீடீரென இடமாற்றம் செய்யப்பெற்று உத்தரவு அனுப்பப்பட்டுள்ளதாக ஒரு செய்தி கூறுகிறது. இதுபற்றி அரசாங்க ஊழியர் சங்கத்தின் யாழ்ப்பாணக் கிளைச் சங்கக் காரியதரிசி, தலைமைச் சங்கத்துக்கு அனுப்பியுள்ள ஓர் ஆட்சேபக் கடிதத்தில், திடீர் இடமாற்றத்துக்கான காரணம் புரியவில்லை என்றும், அரசியல் சூதாட்டத்தில்தாம் பலியிடப்படுவதாயும், இதனால் தங்களுக்குப் பெரும் சங்கடமென்றும், அரசாங்க பெரிய அதிகாரிகளைக் கண்டு இதை நிறுத்திவிடுமாறு செய்ய வேண்டுமென்றும் கேட்டிருக்கின்றார்.

சத்தியாக்கிரகம் நடப்பதால் அரசாங்க ஊழியர், காரியாலயங்களுக்குச் செல்ல முடியாதிருக்கிறார்கள். அனுராதபுரம் முதலிய இடங்களிலிருந்து வேறு குமாஸ்தாக்களைக் கொண்டு வந்தும் பயனில்லை. ஒரு மாத காலமாகத் தமிழ்ப் பகுதிகளில் கச்சேரிகள் இயங்கவில்லை. இந் நிலையில் குமாஸ்தாக்களை இடமாற்றம் செய்தால் பிரச்சினை தீர்ந்து விடாது. அவலை நினைத்து உரலை இடிப்பதில் பயனில்லை.

இடமாற்றத்துக்குத் திட்டமான சில விதிமுறைகளுண்டு. அவற்றைப் பின்பற்ற வேண்டுமேயன்றி எந்தக் குமாஸ்தாக்களையும் சத்தியாக்கிரகம் காரணமாக வீண் இம்சைக்கு உட்படுத்தலாகாது. குமாஸ்தாக்களிடையே வகுப்பு வேற்றுமை புகுந்து "கலாச்சாரம்" என்ற பெயரில் தனி ஸ்தாபனங்கள் உருவாகி வேலை செய்வது, அரசாங்க நிர்வாகத்துக்கு சிறிதும் ஏற்றதன்று. சில மந்திரிகளே, இவ்வித வகுப்புவாத ஸ்தாபனங்களுக்கு அங்கீகாரமளித்து ஆதரிப்பது, எக்காரணம் பற்றியும் உகந்ததல்ல. ஆகவே, இவ்விஷயமாக பிரதமரும் மந்திரி சபையும் புனராலோசனை செய்து, இடமாற்ற உத்தரவுகளை ரத்து செய்வதுடன் குமாஸ்தாக்களிடையே வகுப்பு வேற்றுமை வளராதவாறு தடுக்கவும் வேண்டும்.

திருமலையில் கூட்டம்

திருக்கோணமலை, ஞாயிறு திருகோணமலையில் இன்று மாலை நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் கிளிநொச்சி எம். பி. திரு சிவசுந்தரமும் சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினமும் கலந்துகொண்டனர்.

நிர்மாண திட்டத்தை நிறைவேற்ற வேண்டும்

தீண்டாமை ஒழிப்பு: மதுவிலக்கு கதர்: கல்வி சேவை

— மகாத்மா காந்தி —

நிர்மாணத்திட்டத்தை எல்லோரும் ஒன்று சேர்ந்து நிறைவேற்றி வைக்க வேண்டும். இதற்குத் தனிப்பட்ட ஊழியர்கள் மனதிலும் வாக்கிலும் செயலிலும் அஹிம்ஸையைக் கடைப்பிடிக்கவேண்டும். 'அதிகபட்ச வேலை, குறைந்தபட்ச பேச்சு' என்பதே உங்கள் கோட்பாடாக இருக்கவேண்டும். அரசியலைப்பற்றிப் பேசாதீர்கள். அஹிம்சையைப்பற்றிக்கூட வேண்டாம். நூல்நூற்றல், எழுத்தறிவித்தல் இவற்றில் கவனம் செலுத்துங்கள்.

மதுவையும், மயக்கமூட்டும் பொருள்களையும், சூதாட்டத்தையும் விலக்குங்கள். உடல் நலம், சுகாதாரம், நோய்தடுப்பு முறைகளைப்பற்றிய சாதாரண விதிகளைப் பிரசாரம் செய்யுங்கள். குறைந்த செலவில் அளிக்கக்கூடிய வீட்டு வைத்திய முறைகளைப் பரப்புங்கள்.

முஸ்லிம்களுடன் தொடர்பு கொண்டு அவர்களுக்குச் சுயநலமற்ற தொண்டு செய்ய வேண்டும். ஹரிஜனங்களுடனும் நெருங்கிய தொடர்பு ஏற்படுத்திக்கொள்ளுங்கள்.

சேவைக்காகவே இந்த நிர்மாண வேலை எல்லாம். ஆனால் அஹிம்ஸாபூர்வமான பொறுப்பாட்சிக்கு வேண்டிய பண்பு களை இதுவளர்க்கும் என்பதை மட்டும் உறுதியாக நம்புங்கள். இவ்வாறுதான் தென்னபிரிக்காவில் நான் எனது வேலையைத் தொடங்கினேன். இந்த நிர்மாணத்திட்டம் முடிவின்றிப் போய்க்கொண்டேஇருக்கும்.

* * *

தீண்டாமை என்பது இந்துக்களின் பாவமாகும். இப்பாவத்தைச் செய்ததற்காக அவர்கள் துன்பத்தை ஏற்று தங்களைத் தாங்களே பரிசுத்தம் செய்துகொள்ளவேண்டும். தீண்டாமை ஒழிப்பின் நோக்கம், சமபந்தி போஜனமோ, கலப்பு மணமோ அல்ல.

சத்தியாக்கிரகிகள் அதை ஒரிய அடையக்கூடாது. நான் படித்த தமிழ்ப் பாடங்களில் ஒரே ஒரு பழமொழி எப்போதும் எனது ஞாபகத்தில் இருந்து கொண்டிருக்கிறது. "திக்கற்றவருக்குத் தெய்வமே துணை" என்பதுதான் அது. இந்த உண்மையை அடிப்படையாகக்கொண்டுதான் மகத்தான சத்தியாக்கிரகக் கொள்கையே வகுக்கப்பட்டிருக்கிறது. இந்த உண்மையை நிருபிக்கக்கூடிய ஆதாரங்கள் உலக மத இலக்கியங்கள் எல்லாவற்றிலுமே இருக்கின்றன. கடவுள்மீது மட்டும் நமக்குப் பூரண நம்பிக்கை இருக்குமானால் அவர் நம்மை ஒருபோதும் கைவிடமாட்டார். நாம் பரிசுத்தவான்களாக இருந்தால் வெற்றி நிச்சயமாகக் கிடைக்கும். கடவுள் தனது பக்தர்களைச் சோதித்துக்கொண்டே இருப்பார். ஆனால் தாங்கமுடியாத அளவுக்கு அவர் சோதிக்கமாட்டார். தான் செய்யும் சோதனைகளைத் தாங்கும்பலத்தையும் அவர்களுக்கு அவர் அளிப்பார். சத்தியாக்கிரகத்தில் தோல்வி என்ற எதுவுமே இல்லை. தோல்வி என்று சொல்லப்படுவது வெற்

(6-ம் பக்கம் பார்க்க)

ஐயாறன் எழுதுவது

சென்றவாரம் ஒரு சிங்கள வர்த்தகர் யாழ்ப்பாணத்துக்கு வந்தார். இங்கு நடக்கும் சத்தியாக்கிரகத்தைப் பார்த்துவிட்டு சாமான்கள் அனுப்பலாமா? கூடாதா? என்பதைத் தமது தலைமைக்காரியாலத்துக்குத் தெரிவிப்பதே அவர் வந்த நோக்கம்.

இங்கு நிலைமையை எல்லாம் நேரில் கண்டு, மக்கள் மிகவும் அமைதியாக இருப்பதாயும், ஒழுங்கு முறைக்கு எவ்வித பாதகமும் ஏற்படவில்லை என்றும், வழக்கம்போல் சாமான்களை அனுப்பிவைக்கலாமென்று அவர் அறிவித்துவிட்டதாக என்னிடம் தெரிவித்துவிட்டு, இதே நிலைமையில் சிங்களவர் இருந்தால் கத்தியை எடுத்திருப்பார்கள். தமிழர் மிகப் பொறுமையுடன் அமைதியாக தங்கள் உரிமைப் போரை நடத்துவது என் மனதைப் பெரிதும் கவர்ந்து விட்டது" என்றார். அவர் வாயால் இதைக் கேட்கப் பெருமையாக இருந்தது.

கே. எம். பி, ஆர். ஜி, மேத்தானந்தாபோன்றவர்கள் இங்கு நேரில் வந்து அஹிம்ஸா முறையில் நடக்கும் சத்தியாக்கிரகத்தைக் கண்டால், அவர்கள் மனம் நிச்சயம் மாறி, எதிர்ப்பை விட்டுவிடுவார்கள் என்பது உறுதி. இதை உணர்ந்துதான் அவர்கள் வரவில்லைப்போலும்.

* * *

"மீறிவிட்டோம்! படை சாடிவிட்டோம்" என்ற தலைப்புடனே மட்டக்களப்பிலிருந்து "திமிலைச் சகோதரர்கள்" உணர்ச்சி மிக்க பல கவிதைகளைப் பாடி, அச்சடித்து துண்டுப்பிரசுரங்களாக அனுப்பியிருக்கிறார்கள்.

"நாவலர் தாசன்" என்பவர் சிவராத்திரியன்று திருக்கேதீச்சரத்தில் "சிவாஞ்சலி" என்ற பெயரில் உள்ளத்திலிருந்து பாடிய சில அருமையான பாடல்கள் கிடைத்தன.

சத்தியாக்கிரகம் என்பது யாது? சத்தியாக்கிரகி யார்? என்ற தலைப்புடன் யாழ்ப்பாணம் கே. எஸ். பரிபூரணனந்தர் ஒரு சின்னப் புத்தகம் வெளியிட்டுள்ளார். இன்னும் தினசரி இந்த இயக்கம் சம்பந்தமாக பல துண்டுப்பிரசுரங்கள் கிடைத்தன.

இந்திய விடுதலைப் போர் நடக்கையில்தான் தமிழகத்தில் ஒரு பாரதியார் தோன்றினார். பாரதியார் தமது கவிதைகள் மூலம் மூட்டிவிட்ட கனல் இன்றுவரைத்திலும் பலஉள்ளங்களில் கொழுந்து விட்டெரிந்து கவிதைகளாக வெளிவருவதைக் காண்கிறேன்.

* * *

ஆத்திரேயன் எழுதுவதாவது:

உரும்பிராய் மகளிர் வெள்ளையுடையணிந்து, வாய்களைக் கறுப்புத் துணியால் இறுகக் கட்டி, சோகமே உருவாக, தாய்மார்களை வணங்கிச் சென்று எதிர் வரிசையில் அமர்ந்தார்கள்.

ஓர் வயது முதிர்ந்த அன்னை தினமும் சத்தியாக்கிரகிகளுக்கு நடுவில் அமர்ந்து சந்தோஷமாகப் பாடிக் கொண்டேயிருப்பவர். மழலை தன் வாயில் குதப்பும் மொழி

ஆசிரியருக்கு கடிதம்

முஸ்லிம்கள் தாய் மொழி தமிழ்

இலங்கைமுஸ்லிம்களின் தாய் மொழிதமிழேஎன்று மக்களால் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற முஸ்லிம் பிரதிநிதிகளில் ஏழுபேரும் ஒரு முஸ்லிம் செனேட்டரும், நன்கு ஆராய்ந்து கூறியுள்ளது மிக வரவேற்கத்தக்கது.

ஆனால் ஒரு முஸ்லிம் மந்திரியும், இரு முஸ்லிம் எம்.பி. க்களும் சிங்களமே முஸ்லிம்களின் தாய்மொழி என்று கூறுகின்றனர். முஸ்லிம்கள் தமிழுக்காக வாதாடுவதால், பலவித நன்மைகளை இழக்க நேரிடுமென்று முஸ்லிம் தலைவர்கள் கூறுவதாக இலங்கைவானொலி அலறுகிறது. என்ன நன்மைகளை இழக்க நேரிடும்?

ஆங்கிலம் ஆட்சிமொழியாக இருந்த காலத்திலும்கூட, சிங்கள ஆசிரியர் கட்டாயம் ஆங்கிலம் படித்து பின்னர் ஓர் ஆங்கிலப் பரீட்சைக்குத் தோற்ற வேண்டுமென்ற நிபந்தனை இல்லை. தமிழ் ஆசிரியர்களும் ஆங்கிலத்தில் சித்தியடையாவிட்டால் பதவி ஜூர்ஜிதமாகாது என்று ஒருவிதி இருக்கவில்லை. தமிழ்சுயபாஷா பரீட்சையில் சித்தியடைந்த ஒருவர் மூன்று வருடத்துக்குள், சிங்களத்தில் சித்தியடையாவிட்டால், அவரின் பதவி ஜூர்ஜிதப் படாதென்பது நியாயமா?

இப்போது அறவே சிங்களம் தெரியாத தமிழ் போதிக்கும் தமிழ் முஸ்லிம் ஆசிரியர்கள், மூன்று வருடங்களுக்குள் சிங்களத்தில் தேர்ச்சி பெற்று, சிங்களபாடப் பரீட்சையிலும் சித்தியடைய வேண்டும். இன்றேல் அவர்கள் பதவி நிரந்தரமாக்கப்பட மாட்டாதாம்!

மேலும் இலங்கைவாழ் முஸ்லிம்கள் தங்கள் வீடுகளில் பேசும் மொழி தமிழே. இஸ்லாமிய மார்க்க புத்தகங்கள் ஏராளமாக தமிழிலேயேஉள்ளன.

கல்வியில் பின்தங்கிய முஸ்லிம் சமூகம், நீண்டகாலம் பேசிப் பயின்ற ஒருமொழியை மாற்றி, இன்னொரு தெரியாத அந்நிய மொழியைத் திணிக்க எத்தனிப்பது, வருங்காலச் சமூகத்தின் வளர்ச்சியையும் உரிமைகளையும் அழிக்க அத்திவாரமிடுவதாகும்.

தமிழ்பேசும் அனைவரும் சாதி, மத பேதமின்றி, தமிழுக்கு உரிய அந்தஸ்தைப் பெற ஒற்றுமையுடன் ஒன்றுதிரண்டு ஒருகுரல் எழுப்பவேண்டிய சமயம் இது.

பி. எம். எம். அபூபக்கர்
யாழ்ப்பாணம்.

யுரிமைக்காகத்தானே அவர் சத்தியாக்கிரகம் செய்கின்றார். மழலைகளின் வாய்ப்பூட்டைக் கண்டதும் மனம் நெகிழ்ந்து போயிருக்க வேண்டும். திடீரென்று சத்தியாக்கிரகிகளின் மத்தியிலிருந்து எழுந்தான் அன்னை. மகளிரின் மத்தியில் வந்து அமர்ந்தார். உடனே உற்சாகமாக,

"சட்டமெனும் சங்கிலியால் கட்டிடலாமோ?" எனப் பாடத் தொடங்கினர். அன்னையை மகளிர் சூழ்ந்தனர். உற்சாகமாக வாய்ப் பூட்டைக் கிழித்தெறிந்தனர். சேர்ந்து பாடத் தொடங்கினர்.

ஸ்ரீமதி சிவபாக்கியம் கந்தையா என்ற இவ்வன்னை கடந்த 15 நாட்களாக உபவாசமிருக்கின்றார் என்றறிந்தேன். உபவாசம் ஒரு புறம், சத்தியாக்கிரகம் மறுபுறம். ஆனால் சிரித்த முகம். பாடும் வாய். தொண்டு செய்யும் கைகள்.

இவ்வன்னையின் செய்கை இனறங்கு ஆதிபராசக்தியே தோற்றியதுபோல் இருந்தது.

(6-ம் பக்கம் பார்க்க)

அங்கோலாவில் மீண்டும் கலகம்

ஏராளமான சுதேசிகள் படுகொலை

காங்கோ ஐரோப்பியர்களுக்குபயமுறுத்தல்

நியுயார்க், மார்ச் 19

போர்த்துக்கல் ஆதிக்கத்திலுள்ள அங்கோல ராஜ்யத்தில் மீண்டும் கலகங்கள் ஏற்பட்டிருப்பதாகச் செய்திகள் கிடைத்துள்ளன. புதிதாக அங்கோலாவில் ஏற்பட்டுள்ள இந்தக் கலகங்களை அடக்க துருப்புகள் அனுப்பப்பட்டிருப்பதாகவும், அதனால் ஏராளமானோர் கொல்லப்பட்டிருப்பதாகவும் அங்கோலா ராஜ்ய கவர்னர் அறிவித்திருக்கிறார்.

நாட்டுக்கு எதிரான குற்றவாளிகள் அனைவரும் ஒன்று சேர்ந்து இந்தக்கலகங்களை செய்துவருகிறார்கள் என்று ராஜ்ய கவர்னர் அறிவித்துள்ளார். கலகக்காரர்களை அடக்குவதற்கு மேலும் தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

காங்கோவில்ஐரோப்பியருக்கு பயமுறுத்தல்

காங்கோவின் கிவுமாகாணத்திலுள்ள ஐரோப்பியர்கள் சுதேசிகளால் பயமுறுத்தப்படுவதாக லியப்போட்வில்லிலுள்ள ஐ. நா. அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

கிவுமாகாணத்திலுள்ள ஐரோப்பியர்களுக்கு தற்பொழுது பயங்கர நெருக்கடியொன்று ஏற்பட்டிருப்பதாகவும்கிவுமாகாணத்திலுள்ளபின் தங்கிய பகுதிகளிலுள்ள சுதேசிகள் புராதன உடைகளை தரித்துக்கொண்டுவந்து ஐரோப்பியர்களைப் பயமுறுத்துகிறார்கள் என்றும், இதனால் அங்குள்ள ஐரோப்பியரின் உடைமைகளுக்கும், உயிர்களுக்கும் ஆபத்து ஏற்படக்கூடிய நிலைமை உருவாகியிருக்கிறது என்றும் அறிவிக்கப்பட்டது. ஐரோப்பியர் வாழும் பிரதேசங்களில் ரோந்து புரிவதற்காக ஐ. நா. துருப்புகள் அனுப்பப்பட்டிருப்பதாக ஐ. நா. அதிகாரிகள் தெரிவித்தனர்.

புதுடில்லியில் லாவோஸ் அரசியல் தலைவர்

நேருவுடன் ஆலோசனை நடத்துவார்

லாவோஸ் அரசியல் தலைவர்களின் ஒருவரான இளவரசர் சுவர்ணபூமா புதுடில்லி வந்திருக்கிறார். இந்தியப் பிரதமந்திரி திரு. நேருவுடன் ஆலோசனைகள் நடத்தப்போவதாகவும் லாவோஸ் நிலைமை குறித்து விவாதித்துப் பரிகாரம் காண 14 நாடுகளைக்கொண்ட மகாநாடு ஒன்று நடத்தப்பட வேண்டுமென்ற யோசனைக்கு பிரதமர் நேருவின் ஆதரவை நாடப்போவதாகவும் இளவரசர் சுவர்ணப் பூமா கூறினர்.

லாவோஸ் நிலைமைகுறித்து ஆராய லாவோஸ் சமரசக் கமிஷன் புதுடில்லியில் கூட வேண்டுமென்று ரஷ்யப் பிரதம மந்திரி குருஷேவ் கம்போடிய தலைவர்களிலொருவரான இளவரசர் நரதோமுக்க எழுதியுள்ள கடிதம் ஒன்றில் குறிப்பிட்டிருக்கிறார். ரஷ்யா, சீனா, பாரதம் போன்ற நாடுகள் அந்தக்கமிஷனில் அங்கம் வகிக்க வேண்டுமென்றும், குருஷேவ் யோசனை கூறியுள்ளார்.

அமெரிக்க-ரஷ்ய மந்திரிகள் சந்திப்பு

அமெரிக்க வெளிநாட்டு அமைச்சர் டீன் ரஸ்க்கும்,ரஷ்ய வெளிவிவகார அமைச்சர் குரோமிக்கோவும் நேற்று நியுயோர்க்கில் சந்தித்து ஆலோசனைகள் நடத்தினர்கள். ஐ. நா. வில் அமெரிக்க பிரதிநிதியான அட்லாய் ஸ்டீவன்சனும் அந்தப் பேச்சுவார்த்தைகளில் கலந்துகொண்டார். பொதுவான உலக விவகாரங்கள் குறித்தும், அமெரிக்க-ரஷ்ய நல்லுறவை வளர்ப்பது பற்றியும் அவர்கள் பேசியதாக அறியப்படுகிறது. கெனடி அதிபரானபிறகு அமெரிக்காவுக்கும், ரஷ்யாவுக்குமிடையில் நடைபெற்றமுக்கியப்பேச்சுவார்த்தை இதுவாகும் என்று கருதப்படுகிறது.

அமெரிக்கா வெளியேறும்

வாஷிங்டன் மார்ச் 17

ஸாவூதி அராபியாவிலுள்ள தனது தளத்தைக் காலிசெய்ய அமெரிக்கா இணங்கி விட்டதாயும் ஏப்ரலில் இது காலி செய்யப்படும் எனவும் அறிவிக்கப்பட்டது.

போத்துக்கேயர் அக்கிரமம்

நியூயோர்க் மார்ச் 17

அங்கோலாவில் போர்த்துக்கல் செய்யும் அக்கிரமத்துக்கு அளவேயில்லை என்றும், மக்களின் உதட்டைப் பொத்து அவர்களைத் தூக்கிலிடுவதாயும் முதுகுடன் சேர்த்து உள்ளங்கையைக் குத்துவதாயும் அங்கோலா பற்றி ஆராய ஐ. நா. சபையைக் கூட்டுமாறு செய்யப்பட்ட விண்ணப்பத்தில் கூறப்பட்டிருக்கிறது.

மீன்பிடிப்பகுதி ஆலோசனைச் சபை

மீன்பிடிப்பகுதி ஆலோசனைச்சபைக்கு யாழ்ப்பாணம், குருநகர் திரு. ஆரோக்கியம் யோசேப் உத்தியோகப்பற்றற்ற அங்கத்தவராக நியமிக்கப்பெற்றுள்ளார். 1963 டிசம்பர் மாதம் முடியும்வரை இவர் அங்கத்துவம் வகிப்பார்.

இளைஞர்களின் சினிமா மோகம்

புதுடில்லி, திங்கள்

சினிமா நட்சத்திரங்களாக வேண்டுமென்ற மோகத்தினால் வருடந்தோறும் சுமார் மூன்று இலட்சம் இளைஞர்களும் யுவதிகளும் தம் வாழ்வை கெடுத்துக் கொள்கிறார்கள் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

டில்லியிலிருந்து பம்பாய்க்கு சினிமா நட்சத்திரமாக வேண்டுமென்ற மோகத்தில் ஓடிவருகிறவர்கள் அனேகர் பம்பாயில் ஹோட்டல்களிலும் வேறு நிலையங்களிலும் கோப்பைகள் கழுவுதல் போன்ற வேலைகளைச் செய்து வருகிறார்களாம்.

கப்பல் கட்டுந்துறை

புதுடில்லி, திங்கள்

கொச்சியில் இரண்டாவது கப்பல் கட்டுந் துறைக்கான வேலைகள் பணக்குறைவினால் தடைப்படமாட்டா வென்று இந்திய மந்திரி ராஜபகதூர் அறிவித்துள்ளார்.

லண்டனில் நேரு–ஆயுப் சந்திப்பு

லண்டன் திங்கள்

பாகிஸ்தான் அதிபர் ஆயூப் கானும் இந்தியாவின் பிரதமர் நேருவும் நேற்று இங்கு சந்தித்துப் பேசினர்கள். இந்திய ஸ்தானிகர் விடுதியில் சந்தித்த அவர்கள் 30 நிமிஷநேரம் வரை பேசிக்கொண்டிருந்தார்கள்.

ஒரு முறையாவது பிரார்த்தனை செய்க!

சைவ மக்கள் தினந்தோறும் ஒரு முறையாவது சத்தியாக்கிரக இயக்கம் வெற்றி பெறப் பிரார்த்தனை செய்ய வேண்டுமென்றும்' ஆலயங்களில் விசேஷ ஆராதனைகளும் கூட்டு வழிபாடுகளும் நடைபெற வேண்டுமென்றும் கேட்டுக் கொள்ளும் தீர்மானமும் வேறு சில தீர்மானங்களும் அகில இலங்கை சைவப் புலவர் பட்டதாரிகள் சங்கத்தின் செயற்குழு கூட்டத்தில் நிறைவேற்றப்பெற்றன.

சத்தியாக்கிரகம் சம்பந்தமான நடவடிக்கைகள்

பாதுகாப்பு அமைச்சே கவனிக்குமாம்

கொழும்பு, ஞாயிறு

சத்தியாக்கிரக இயக்கம் சம்பந்தப்பட்ட சகல விஷயங்களிலும் வடக்கு கிழக்கு மாகாணங்களின் நிர்வாகத்தைப் பாதுகாப்பு வெளி விவகார அமைச்சு கவனிக்க வேண்டுமென்று அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

சத்தியாக்கிரக இயக்கம் சம்பந்தமாக எழும் உத்தரவுகளை அமுல் நடத்துவதற்கு அரசாங்க அதிபர்களுக்குப் பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சுதான் உத்தரவிடும். இதர அமைச்சுகளுடன் கலந்தாலோசித்தே இந்த நடவடிக்கைகளைப் பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சுவடுக்குமாம்.

"சத்தியாக்கிரக இயக்கம் நடைபெறும் பகுதிகளில் பங்கீட்டரிசி விநியோகம் நடைபெற வேண்டும்" என்று அரசாங்க அதிபர்களுக்கும் மந்திரி சபை தெரிவித்துள்ளது.

அம்பாறையில் புதிய கச்சேரி நிறுவும் திட்டத்தைத் துரிதப்படுத்துவதென்றும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

டாக்டர் வெர்வூட்

லண்டன் மார்ச் 17

தென்னபிரிக்க பிரதமர் டாக்டர் வெர்வூட் திங்கட்கிழமை லண்டனிலிருந்து தாயகம் புறப்படுவார்.

மின்சார 'பல்பு' தொழிற்சாலை

கொழும்பு, வெள்ளி

மின்சார 'பல்புகள்' விரைவில் இலங்கையில் உற்பத்தி செய்யப்படும். இத்தொழிற் சாலை மே மாதத்தில் பொரளையில் நிறுவப்படவிருக்கிறது.

இலங்கை சேமிப்பு

வங்கியில் ஒழுங்கீனம்

விசாரணை நடத்த வற்புறுத்து

கொழும்பு, ஞாயிறு

இலங்கை சேமிப்பு வங்கியில் பாரதூரமான ஒழுங்கீனங்கள் நடைபெற்றிருப்பதாக இலங்கை சேமிப்பு வங்கி ஊழியர்கள் சங்கம் பிரதமருக்கும் நிதிமந்திரிக்கும் புகார் செய்திருக்கிறது. இப் புகார்களை விசாரணை செய்ய உடனடியாக ஒரு குழுவை ஏற்படுத்தும்படி அரசாங்கம் பிரதமரையும், நிதி அமைச்சரையும் வற்புறுத்தியிருக்கிறது.

வங்கியில் தளபாடங்கள் விஷயத்தில்மோசடி நடந்திருப்பதாகவும் குறிப்பிட்ட சில அதிகாரிகள் விசேஷ சம்பள உயர்வும், செலவுப்படியும் பெறுவதாகவும் பெரிய அதிகாரிகள், காரியாலய நேரத்தில் சில்லறை ஊழியர்களைக் கொண்டு சொந்த வீட்டுக் காரியங்களைச் செய்விப்பதாகவும், அவர்கள் குற்றஞ் சாட்டியுள்ளனர்.

ஒழுங்கீனங்கள் நடந்திருப்பதை நிரூபிக்கக் கூடிய அறிக்கைகள் இடாப்புக்களை அப்புறப்படுத்துவதற்கான முயற்சிகள் நடைபெறுவதாகவும் குற்றஞ் சாட்டப்பட்டிருக்கிறது.

வெளிவந்து விட்டது!

தமிழ் இலக்கிய விளக்கம்

[G. C. E. 1962—1964]

மாணவர் மலிவுப் பதிப்பு

கம்பராமாயணம்: சுந்தரகாண்டம் காட்சிப் படலமும், நிந்தனைப் படலமும் (பதவுரை, சிறப்புரை, பொழிப்புரை, மாதிரி வினாக்கள்)

பாரதி பாடல்கள்: (அரும்பதவுரை, விளக்கம், மாதிரி வினாக்கள்)

அகமும் கலையும்: (பாடல்களின் அரும்பதவுரை, மாதிரி வினாக்கள்)

உதயணன் சரிதை: (மாதிரி வினாக்கள்)

இவை எல்லாம் சேர்ந்த, ஒரே புத்தகம்

விலை: 2 ரூபாய் மாத்திரம்

வெளியிடுவோர்:

கலைமகள் மன்றம்

காரைநகர்.

கிடைக்குமிடங்கள்:

1—இரத்தின புத்தகசாலை, கொழும்பு.
2—அன்சாரி புத்தகசாலை, ஆமர்வீதி, கொழும்பு.
3—பஸ்தியாம்பிள்ளை புத்தகசாலை, யாழ்ப்பாணம்.
4—கலாதேவி அச்சகம், புகையிரத நிலைய வீதி, சுன்னாகம்.
5—சக்தி நூல் நிலையம், மட்டக்களப்பு.

நீரழிவு வியாதிக்கு

புத்தம் புதிய மருந்து

ஜெர்மன் ஆராய்ச்சி நிபுணர்களால் தயாரிக்கப்பட்ட

"டயமெலன்"

(DIA MELLON)

வியாதியஸ்தர்களுக்கு இலவச ஆலோசனையும் அளிக்கப்படும்.

25 வில்லைகள் கொண்ட போத்தல் ஒன்றுக்கு ரூ. 6-50

இலங்கை விநியோகஸ்தர்கள்:

போன்: 4805

நியூ கொழும்பு மெடிக்கல் ஸ்டோர்ஸ்

82, மெயின் வீதி,

கொழும்பு.

வரி விளம்பரம்

உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம். நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 10-50. இவை பற்றிய கற்றலோக் (Catalogue) இனம்.

வைத்தியர் பரிபூரணநந்தர்,
கைலாசபிள்ளையார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.
Advt. 58

கோழிப்பண்ணைக்காரருக்கு ஒரு முக்கிய செய்தி

அதிக முட்டையிடும் இனங்களுக்கும், அதிக சக்தியூட்டும் தீன்வகைக்கும், உணவு வகைகளை வீணுக்காது பாதுகாக்கும் பாத்திரங்களுக்கும், கோழி நோய்களைத்தடுக்கும் மருந்துகளுக்கும், கோழி வளர்க்கும் முறைகள் பற்றி அனுபவம் வாய்ந்தவர்களின் இலவச ஆலோசனைக்கும்

கோழிப்பண்ணைக் கூட்டுஸ்தாபனம
3, ஸ்டான்லி வீதி
யாழ்ப்பாணம்.,
Advt. 61

இலக்கியப் புதையல்

—கால் ஆண்டு வெளியீடு—

வருட சந்தா ரூபா 2-00

இன்றே சந்தா அனுப்பிப் பதிவு செய்து கொள்ளுங்கள்.

நான்காவது இதழ் அரிய கட்டுரைகளுடன் வெளிவந்துள்ளது.

விபரங்களுக்கு:
நா. ஞானசம்பந்தன்,
B. A. Hons
இலக்கியப்புதையல் அலுவலகம்,
வட்டுக்கோட்டை.
Advt 64. (இலங்கை)

National Education
Its Concept and Content
by
N. Sabaratnam
(B. A Lond.)
Asst. Master, Karainagar-Hindu College.
Price Rs. 1/75 cts.
Publishers:
S. S. Sanmuganathan & Sons.
Jaffna.
Advt. 66.

க. பொ. த. பரீட்சை
1962 - 1964:
தமிழ் இலக்கியம்:
காட்சிப் படலம்:
நிந்தனைப் படலம்:
சொற் பிரிப்பு, கொண்டு - கூட்டு, அரும்பதவுரை, பொருள் விளக்கம், இலக்கணக் குறிப்புக்கள் அடங்கிய சிறந்த உரை.
ரூ. 2.50
அர்ச். பிலோமினு அச்சகம்,
யாழ்ப்பாணம்.
Adt. 68.

ஆசிரியர் சங்கக் கூட்டத்தில் குழப்பம்

மொழிப் போராட்டத்துக்கு ஆதரவளிக்கத் தீர்மானம்

யாழ்ப்பாணம், திங்கள்

"மொழி உரிமைக்காக நடை பெறும் போராட்டத்துக்குப் பூரண ஆதரவு கொடுப்பது என்னும் தீர்மானம் வடமாகாண ஆசிரியர் சங்கக் கூட்டத்தில் நிறைவேற்றியது. இத் தீர்மானத்தை ஆதரித்து 78 பேரும் எதிர்த்து 18 பேரும் வாக்களித்தனர்.

மொழிப் போராட்டத்தை ஆதரித்தும் பொலிஸ் இராணுவத்தின் நடவடிக்கைகளை எதிர்த்தும் இம்மாதம் 25-ந் திகதி சனிக்கிழமை ஓர் ஆர்ப்பாட்டம் நடத்துவதெனவும் கூட்டத்தில் முடிவு செய்யப் பட்டது.

இத் தீர்மானங்களைத் தொடர்ந்து கூட்டத்தில் குழப்பம் ஏற்பட்டதாகத் தெரிகிறது.

இத்தீர்மானங்கள் ஆசிரியர்களுக்கு நன்மை தராததுடன் தீமைகளையே விளைவிக்கும் என்று தலைவர் திரு. எஸ். பி. நடராசா தெரிவித்ததுடன் தொடர்ந்து சங்கத்தின் தலைவராக இருக்கத் தாம் விரும்பவில்லையென்றும் கூறித்தலைவர் பதவியை ராஜினமாச் செய்வதாக அறிவித்துவிட்டு வெளியேறியதாகவும் தெரிகிறது.

தலைவர் திரு. எஸ். பி. நடராசாவைத் தொடர்ந்து காரியதரிசியும் மற்றும் சில அங்கத்தினர்களும் கூட்டத்தை விட்டு வெளியேறினர்.

இதன்பின் இடைக்காலத் தலைவராக ஒருவரும், இடைக்காலக் காரியதரிசியாக இன்னொருவரும் தெரிவு செய்யப் பட்டுக் கூட்டம் தொடர்ந்து நடைபெற்றதாம். இக்கூட்டத்தில் மொழிப் போராட்டத்துக்கு நிதி உதவியளிப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டதெனத் தெரிகிறது.

சாவகச்சேரி கிராமச்சங்கக் கட்டடத்தில் கறுப்புக்கொடி

சாவகச்சேரி, சனி

சாவகச்சேரிக் கிராமச் சங்கத்தின் விசேடக் கூட்டம் தலைவர் திரு. பொ. அருளம்பலத்தின் தலைமையில் நடைபெற்றது. இக் கூட்டத்தில் தமிழர் விமோசனம் அடையும் வரை சங்கக் கட்டடத்தில் கறுப்புக்கொடி பறக்கவிட முடிவுசெய்யப்பட்டது. வெள்ளிக்கிழமை தொடக்கம் கறுப்புக்கொடி கட்டடத்தில் பறக்கிறது. சங்கத் தீர்மானத்தின் படி தலைவர் திரு. பொ. அருளம்பலத்தின் தலைமையில் அங்கத்தினர் சத்தியாக்கிரகத்தில் கலந்துகொண்டனர்.

பழைய முறையில் அரிசி வழங்குக

யாழ்ப்பாணம், திங்கள்

வழமை போல் பங்கீட்டரிசி வழங்க முடியாத சந்தர்ப்பங்களில் விநியோக நிலையங்கள் மூலமும், இதர ஸ்தாபனங்கள் மூலமும் பங்கீட்டு அரிசி விநியோகித்தது போலவே இப்பொழுதும் விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்ளும் தீர்மானம் யாழ்ப்பாண மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாஜக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது. கேட் முதலியார் ஸ்ரீ. தியாகராஜா தலைமையில் இக் கூட்டம் நடைபெற்றது.

'வட்டமேசை மாநாடு தீர்வுகாண ஒரேவழி'

கரவெட்டி

இன்றைய அரசியல் நிலைமையில் தமிழருக்கு விமோசனமளிக்க நாம் காணும் ஒரே வழி, வட்டமேசை மகாநாடுதான். தமிழும் தமிழைப்பாதுகாக்கும் பொறுப்பும் உரிமையும் எல்லாத் தமிழருக்கும் உண்டு." இவ்வாறு, அகில இலங்கைத தமிழ்க் காங்கிரஸ் வாலிப முன்னணியின் காரியக் குழு பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள ஓர் அறிக்கையில் கண்டிருக்கிறது. அவ்வறிக்கை மேலும் கூறுவதாவது:- "ஒரு இனத்தின் தன்மானத்தையும் வாழ்வையும் பாதிக்கக்கூடிய பெரிய பிரச்சினைகளை இருகட்சிகள் மாத்திரம் தீர்த்துவிட முடியாது. ஆகவேதான் திரு. டட்லி சேனநாயக்கா போன்றவர்களும் வட்டமேசை மாநாட்டை வரவேற்கிறார்கள். கே. எம். பி. ராஜரத்தினம் போன்ற தீவிரவாதிகள் எதிர்க்கின்றனர்.

ஆகவே, தமிழ்த்தலைவர்கள் உடனடியாக ஒரு வட்டமேசை மாநாட்டுக்கு வேண்டிய ஆயத்தங்களைச் செய்யவேண்டியது அவசியமாகும். இப்படியான ஒரு மாநாட்டில் பல்வேறு மதத்தினரதும் இனத்தினரதும் பிரதிநிதிகளும் கலந்து கொள்வது விரும்பத்தக்கது"

சத்தியாக்கிரகிகளைப் பொலிசார் தாக்கியதைக் கண்டிக்கும் தீர்மானமும் இராணுவத்தை உடனே வாபஸ்பெற வேண்டுமென்று கோரும் தீர்மானமும் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

மார்ச் மாதம் நடக்கவிருந்த யாழ்ப்பாண மாவட்ட சனசமூக நிலையங்களின் வருடாந்த மாகாட்டை பின் போடுவதென்றும் முடிவு செய்யப்பட்டது

பிரதமரின் செய்திக்கு டாக்டர் நாகநாதன் ஆதரவு!

யாழ்ப்பாணம், திங்கள்

காமன்வெல்த் பிரதமர்கள் மகாநாட்டில் கலந்துகொள்வதற்காக லண்டனுக்குப் புறப்படும் சமயத்தில் பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா நாட்டு மக்களுக்கு, குறிப்பாக தமிழ்ப் பேசும் மக்களுக்கு வானெலியில் ஒரு செய்தி விடுத்தார். இச்செய்தி துண்டுப்பிரசுரங்களாக வெளியிடப்பட்டுள்ளது. இத் துண்டுப்பிரசுரங்களை யாழ்ப்பாணத்திலுள்ள இராணுவத்தினர் விநியோகித்துவந்தனர். ஒவ்வொன்று ஒவ்வொன்றாக மக்களிடம் விநியோகிக்க முடியாத இராணுவத்தினர் கட்டுக்கட்டாக ஒவ்வொரு இடத்திலும் வீசிச் செல்கின்றனர்.

சமீபத்தில் மக்கள் சிலர் கூடியிருந்த இடத்தில் இராணுவத்தின் இத்துண்டுப் பிரசுரங்களை ஒரு கட்டாகத் தூக்கிப் போட்டனர். அங்கு நின்றவர்கள் அவற்றுக்குத் தீவைத்துக் கொளுத்த முயற்சி செய்தனர். இதையறிந்த டாக்டர் நாகநாதன் அந்த இடத்துக்கு விரைந்து சென்று துண்டுப் பிரசுரங்களைக் கொளுத்த வேண்டாமென்றும் அவற்றை விநியோகிக்க உதவிசெய்யும் படியும் கேட்டுக்கொண்டார். "ஏன்" என்று ஆச்சரியத்துடன் கேட்ட மக்களுக்கு பிரதமர் சிறிமா வானெலியில் விடுத்த செய்திதான் இன்று சத்தியாக்கிரக இயக்கத்தில் பெண்கள் பெருந்தொகையாகக் கலந்துகொள்வதற்கும் பிள்ளைகளை ஆயிரமாயிரமாக இந்த இயக்கத்துக்குப் பெற்றூர் அனுப்புவதற்கும் காரணமென்றும் விளக்கம் கொடுத்தார்:

துண்டுப்பிரசுரங்களை இராணுவத்தினர் விநியோகிக்கும் வேலை இப்பொழுது நடைபெறுவதில்லை.

அமைதியான முறையில் தமிழரிமை பெறுவோம்

கொடிகாமம், திங்கள்

"தமிழன்னையின் இன்னலைத் துடைத்து அவளை மீண்டும் அரியாசனம் ஏற்ற நாம் முயற்சி செய்ய வேண்டும். இதற்காக உணர்ச்சி வசப்பட்டு அசம்பாவித சம்பவங்கள் நிகழ் வழி செய்துவிடக் கூடாது. அமைதியான முறையில் நம் தொண்டை மேற்கொள்ள வேண்டும்." என்று கச்சாய் கிராமச் சங்கத் தலைவர் திரு. ஏ. டி. சிதம்பரப் பிள்ளை சத்தியாக்கிரகத்தில் கலந்து கொள்வதற்காகக் கொடிகாமச் சந்தையில் கூடியிருந்த மக்கள் மத்தியில் பேசும்போது கூறினர்.

'அல்கத்தீன்' பைப் தூரத்திலுள்ள கிராமங்களுக்கு எப்பொழுதும் சுத்தமான தண்ணீர் விநியோகத்தை நிச்சயப் படுத்துகின்றது.

அனுகூலங்கள்:

★ 'அல்கத்தீன்' பைப் பாரமற்றதாகையால் அதைக் கையாளுவது சுலபம்.

★ 'அல்கத்தீன்' பைப் 500 அடி ஆழம் வரையுள்ள வசதியான சுருள்களில் இடைக்கின்றது.

★ 'அல்கத்தீன்' பைப் வளைக்கூடிய தாகையால் அதை நிறுவுவது எளிது. இதை கரடு முரடான ஏற்ற இரக்கமான நிலத்திலும் பாவிக்கலாம்.

★ 'அல்கத்தீன்' பைப் உறுதியானதும் நீடித்து நிலைக்கக் கூடியதுமாகையால் இது தற்காலிகமாகவும் நிரந்தரமாகவும் நிறுவப்படுவதற்கு சிபார்சு செய்யப் பட்டிருக்கின்றது.

★ 'அல்கத்தீன்' பைப் பாவுண சம்பந்தமில்லாதது. துரு பிடிக்கவிடாது. தண்ணீரைச் சுத்தமாக வைக்கின்றது. இது செதில்களாகப் பெயர்வதில்லை. தேய்வை எதிர்க்கின்றது. சாதாரணமாக அரிக்கும் என்று கருதப்படும் மண்ணிலுலும் தண்ணீராலும் பாதிக்கப்படாதது.

★ 'அல்கத்தீன்' பைப் (சாதாரண கேஜ்) 'அல்கப்லான்' சாதனங்களோடு பாவிக்கும் பொழுது உங்களுக்கு ஓர் முழுவதும் பொலித்தீனுலான பைப் போடும் முறையைக் கொடுக்கின்றது.

★ 1½ அங்குலத்திலிருந்து 2 அங்குல அளவு துவாரங்களுள்ள 'அல்கத்தீன்' பைப் சாதாரண கேஜிலும் பாரமான கேஜிலும் இடைக்கின்றது.

விபரங்கட்கும் தொழில்சம்பந்தமான ஆலோசனைகளுக்கும் கிழ்கண்ட விலாசத்துக்கு எழுதவும்:
இம்பீரியல் கெமிக்கல் இன்டஸ்ட்ரீஸ் (எக்ஸ்போட்) லிமிடெட்
(இம்பீரியல் கெமிக்கல் இன்டஸ்ட்ரீஸ் லிமிடெட்டின் ஓர் துணைக்கம்பெனி
இங்கிலாந்தில் இணைக்கப்பெற்றது. அங்கத்தவரின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது)
போற் பெட்டி 352, கொழும்பு.

தமிழ்ப் பகுதிகள் நிர்வாகம் தமிழிலே நடக்கவேண்டும்

[ஏ. ஸி. நடராஜா]

மொழிப் பிரச்சினை விஷயமாக சென்ற 4-ந் திகதி பிரதம மந்திரி வெளியிட்ட அறிக்கை சிலர் மனதில் தவறான எண்ணம் ஏற்படுத்துவதாகும். அரசாங்கத்துக்கு தமிழர் நியாயமற்ற முறையில் சங்கடங்கள் விளைவிக்கிறார்கள் என்று தோன்றக்கூடும்.

"வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நீதிமன்றங்களிலே, தமிழில் சாட்சியமளிக்க எவ்வித தடையும் இராது" என்கிறார் பிரதமர். இதில் எவ்வித தடையும் இருக்கவே முடியாது, அதனால் தான் தடை இராது. உலகத்திலே எங்கேயும், ஒருவர் தமது சொந்த மொழியில் சாட்சியமளிப்பதைத் தடை படுத்துவதில்லை. வடக்கிலும் கிழக்கிலும் மட்டுமல்ல. எந்த நீதிமன்றத்திலும் தமிழர் தமிழில்தான் சாட்சியமளிப்பாரென எதிர்பார்க்கப்படுவார். ஒரு சீனரோ, அல்லது ஆங்கிலேயரோ தந்தம் மொழியிலேயே சாட்சியமளிப்பது போல. ஏனெனில் ஒவ்வொருவரும் தமக்குத் தெரிந்த மொழியில்தான் பேசவும் சாட்சியமளிக்கவும் முடியும்.

சாட்சியமளிப்பதென்பது முக்கிய விஷயமல்ல. மனு, பதில், குற்றச்சாட்டு எல்லாவற்றையும் படித்து விளங்கிக் கொள்ள முடியவேண்டும். நீதிமன்றத்தில் வழக்கு விசாரணையை விளங்கிக் கொள்ளுவதுடன், அவசியமானால் தமதுவழக்கைத் தானே நடத்தவும், வழக்கு தஸ்தாவேஜுகளை பார்வையிட்டு, அவற்றை விளங்கிக்கொள்ளும் படியும் இருத்தல் வேண்டும்.

இன்று நடப்பெல்லாம் ஆங்கிலத்தில் இருக்கையில், சிங்களவரோ, தமிழரோ கோர்ட் நடவடிக்கைகளை விளங்கிக் கொள்ள முடியாதிருக்கிறது. ஆங்கிலம் தெரியாத காரணத்தால், பல வழக்குகளிலே, கட்சிக்காரர்களுக்கு விஷயமே புரியாத நிலையில், வழக்கறிஞர்களே தங்களுக்குள் பேச்சுகள் நடத்தி முடிக்கிறார்கள். சமரசமத்தியஸ்த விபரங்கள் கட்சிக்காரர்களுக்கும் சரிவரத் தெரிவதில்லை. ஒரு பகுதியிலுள்ள மக்கள், பேசும் மொழியிலேயே, அங்கு நீதிமன்ற விசாரணை நடவடிக்கைகள் நடத்துவதிலுள்ள நன்மைகளை யாரும் மறுக்க முடியாது.

நீதிமன்றங்களில் சிங்களத்தைப் புகுத்தியபின், சிங்கள மக்களைப் பொறுத்தவரை மேற்குறித்த வசதியினங்கள் நீங்கப் பெறும். ஆனால் தமிழருக்கோ, நிலைமை முன்னிலும் அதிகமோசமாக்கப்படுவதாகவுள்ளது. நீதிமன்ற மொழிச்சட்டத்தின்படி, வடக்கிலும் கிழக்கிலுமுள்ள கோர்ட்டுகளிலும், மற்ற நீதிமன்றங்களைப்போலவே, நீதிமந்திரி தீர்மானிக்கும் எச்சமயத்திலும், சிங்களமூலம் விசாரணை நடத்தும்படி செய்துவிடலாம். தமிழ் பேசும் மக்களே பெரிதும் வாழும் பகுதிகளில்கூட, கட்சிக்காரரின் வாக்குமூலம், விசாரணை, தஸ்தாவேஜுகள் சிலவற்றை தமிழில் வைத்திருக்க, ஒரு சுதந்தர ஜனநாயக இலங்கையிலும் சட்டம் இடமளிக்காதது வருந்தத்தக்கது.

தமிழில் பத்திரங்களை நிரப்புவது, தமிழில் கடிதம் எழுதுவது முதலியன இப்போது அனுமதிக்கப்பட்டுள்ள சில விஷயங்களைப் பிரதமமந்திரி குறிப்பிட்டுள்ளார். கல்வியைத் தவிர மேற்குறித்த விஷயங்களிலும் சட்ட நிர்ப்பந்தம் எதுவுமில்லை. இவ்விஷயங்கள்பற்றி விதிமுறைகளை, (ரெகுலேஷன்) மந்திரி, தமிழ்மொழி விசேஷ உபயோகச் சட்டத்தின்படி தயாரிக்கவேண்டும். அவ்விதவிதிமுறைகள் தயாரிக்கப்படவில்லை. அதனால்தான் இதுபற்றி ஒரு சீரான ஏற்பாடு இல்லை. நிர்வாக அதிகாரிகளின் இஷ்டப்படி, வெவ்வேறு முறை கையாளப்படுகின்றது. குறிப்பிட்ட பல விஷயங்களும், சட்டப்படி அனுமதிக்கப்பட்டிருப்பதாக அவரது அறிக்கையிலிருந்து தோன்றக்கூடும். அது அப்படி இல்லை.

முக்கிய விஷயம் என்னவெனில், வடக்கு மாகாணத்தில் 100 க்கு 95 பேர் பேசுவது தமிழ். கிழக்கு மாகாணத்தில் 85% மக்கள் தமிழே பேசுகிறார்கள். இங்கிலையில், ஏன் அப்பகுதியில் நிர்வாக மொழி தமிழாக இருக்க முடியாதென்பதுதான் கேள்வி. உண்மை நிலைமைக்குத்தக்கபடி அனுபவத்துக்குரிய முறையில், அரசாங்கம் நேர்மையான கருத்துக் கொண்டு வடக்கு கிழக்கு மாகாணங்களில். நிர்வாகத்தைத் தமிழிலேயே நடத்த ஒழுங்கு செய்யவேண்டும்.

நமது நாட்டின் பொருளாதார நிலை வரவர மோசமாகி வருகிறதென்பதை யாவரும் ஒப்புக்கொள்ளுவதுடன், அதை அபிவிருத்தி செய்ய ஒற்றுமையுடன் முயலவேண்டுமென்றும் கூறுகின்றனர். தமிழ் மக்களின் நியாயமான மொழி உரிமை முன்னரே அளிக்கப்பட்டிருப்பின், வீண் செலவும், உயிர்ச் சேதமும், இரு பெரிய சமூகங்களுக்கிடையே ஏற்பட்டுள்ள வேற்றுமைகளும் இல்லாமற் செய்திருக்கக்கூடும்.

இந்தியாவில் ஏற்பட்டுள்ள பொருளாதார முன்னேற்றம் பிரதமரின் மனதைப் பெரிதும் கவர்ந்தது. இந்தியாவிலே ஒவ்வொரு மாகாணத்திலும், நிர்வாகம் அங்குள்ள மக்களின் மொழிகளிலேயே நடக்க அனுமதிக்கப்பட்டுள்ளது. ஆகவே அந்த வழியை நாமும் பின்பற்றி அரசாங்க மொழியால் ஏற்பட்டுள்ள சமூக பிரச்சினைகளை நாம் தீர்த்து, அதிக முக்கியமான பொருளாதார முன்னேற்ற விஷயத்தில் கவனத்தைத் திருப்பவேண்டும்.

நாம் சுதந்திர மடைந்து 12 ஆண்டுகளாகின்றன. இதில் பெரும்பகுதியும் பல அரசியல் கட்சிகளும் அதிகாரத்தைக் கைப்பற்றும் போட்டியில் ஈடுபட்டன. இதனால் நாட்டுக்கு ஏற்படும் தீங்குகளை கவனிக்கவில்லை. மொழி விஷயத்தில் ஒரு கண்ணியமான சமரசம் ஏற்படுமென்று தமிழ்ப்பேசும் மக்கள், தம்பி அதற்காக வேலை செய்யவும் வந்திருக்கிறார்கள். மேற்கொண்டு பேச்சுகள் நடத்துவதில் பயனில்லை என்று கண்டபோதுதான், சத்தியாக்கிரக இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது.

இன்று தமிழ் பேசும் மக்களெல்லாம், தங்கள் மொழி உரிமைகள் வேண்டுமென ஒரு குரலில் கேட்கிறார்கள். பொதுவாக சிங்கள மக்களும் மொழி உரிமை அளிப்பதை எதிர்க்கவில்லை. நமது நாட்டின் நன்மைக்கு இவ்விஷயமாக ஒரு சமரசம் உடனே ஏற்படுவது அவசியமாகும்.

விசாரணைக்கு ஐ. நா. ஏற்பாடு

லுமும்பா கொலை எதிரொலி

நியூயோர்க், மார்ச் 17

காங்கோவின் முதல் பிரதமர் பாட்ரிஸ் லுமும்பாவின் கொலைபற்றி விசாரணை நடத்த ஐ. நா. வைச் சேர்ந்த முன்றுநாடுகள் அடங்கிய குழுவொன்று ஏற்படுத்தப்படவிருக்கிறது. இந்தக்குழுவில் சேவை புரிவதற்கு பிரதிநிதிகளைக் கொடுத்துதவும்படி பர்மா, எதியோப்பியா, மெக்ஸிக்கோ, ஆகிய நாடுகள் கேட்கப்பட்டிருப்பதாக இங்கு செய்திகிடைத்திருக்கிறது.

தங்கள் நாடுகளுடன் தொடர்பு கொண்டு லுமும்பா கொலைபற்றி விசாரணை செய்யும் குழுவில் அங்கம் வகிப்பதற்கான பிரதிநிதிகளின் பெயர்களை சமர்ப்பிக்கும்படி ஐ. நா. பிரதம காரியதரிசி, நியூயோக்கிலுள்ள பர்மா, எதியோப்பியா, மெக்ஸிக்கோ நாட்டு நிரந்தரப் பிரதிநிதிகளைக் கேட்டிருப்பதாக நம்பகமாகத் தெரிகிறது.

எதியோப்பியா ஒரு தலை சிறந்த வழக்கறிஞரின் பெயரை ஏற்கனவே சமர்ப்பித்துவிட்டதாகவும், பர்மாவும், மெக்ஸிக்கோவும் தங்கள் பிரதிநிதிகளின் பெயர்களை விரைவில் சமர்ப்பிக்கக் கூடுமென்றும் கருதப்படுகிறது.

கமக்காரர் கவலை

உசன் வெளியில் நெல்விளைச்சல் அதிகமாக இருந்தும், கடந்தவாரம் சிறகை என்னும் பறவைகள் நெற்காணியில் நெல்லைத்தின்றதனால் கமக்காரர்கள் பெரிதும் கவலை அடைந்துள்ளனர். அறுவடை செய்தாலும் கூலிக்கே தாளியம் போதாமல் போய் விடும் என்று அஞ்சுகின்றனர்.

இன்பகரமான 3-வது வாரம்!

பார்த்துப் பயன் அடைய வேண்டிய பண்பு நிறைந்த படம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை)

நடிகர்கள்: நடிகைகள்:

என். டி. ராமராவ் சௌகார் ஜானகி

வி. நாகையா பி. கண்ணும்பா

டி. எஸ். பாலையா கிரிஜா

பி. எஸ். வீரப்பா மோகனா

ராஜ சேவை

பின்னணி: திருச்சி லோகநாதன், ஏ. எல். ராகவன், கண்டசாலா, எஸ். ஸி. கிருஷ்ணன், பி. சுசீலா, பி. லீலா, எஸ். ஜானகி.

அநேகரின் வேண்டுகோளுக்கிணங்க இப்பொழுது திரையிடப்படுகிறது!

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) எம். ஜி. ராமச்சந்திரன், பானுமதி, சரோஜாதேவி நடித்த

நாடோடிமன்னன்

இப்பொழுது திரையிடப்படுகிறது!

மனோகரா (யாழ்ப்பாணம்)

ஜனக் ஜனக் பாயல் பாஜே

(நடனங்கள் நிறைந்த கலர்ப்படம்)

கோபி கிருஷ்ணா - சந்தியா பகவான் நடித்தது.

கைப்பந்தாட்டம்போட்டி

வல்வெட்டித்துறை, வியாழன் வல்வை நெடியகாட்டு இளைஞர் விளையாட்டுக் கழகமைப் பந்தாட்டக்கோஷ்டி, பருத்தித்துறை கோல்டின் விளாஸ் கைப்பந்தாட்டக் கோஷ்டியை 2: 1 ஆட்டங்களால் வென்று சாம்பியனுகிக் கொண்டது.

மணிப்பர்ஸ் தொலைந்ததா?

14 ரூபாய்த் தாள்கள், கொள்ளுப்பிட்டி ஹார்மானில் லோண்டரிச் சீட்டு, சன்னைத்திலிருந்து கொள்ளுப்பிட்டிக்குப் பிரயாணம்செய்யக்கூடிய வார இறுதி ரயில்வேப் பிரயாணச் சீட்டு (கொள்ளுப்பிட்டி ரயில் நிலையத்தில் 17-3-61-ல் எடுத்தது.) இப்பொருள்களைக் கொண்ட கறுத்த மணிப்பர்ஸொன்று கண்டெடுக்கப்பட்டு நல்லூர் கந்தசுவாமி கோவில் மானேஜரிடம்இருக்கிறது. இதற்கு உரியவர் நல்லூர் தேவஸ்தான காரியாலயத்தில் ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளலாம்.

கடல் தொழிலாளரின் ஊர்வலம்
சனிக்கிழமை நடந்த சத்தியாக்கிரக நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணத்தில் மறியல் இயக்கம் ஆரம்பமான தினத்திலிருந்து இதுவரை கச்சேரி கண்டிராத அளவு பெருந் திரளான மக்கள் சென்ற சனிக்கிழமை கச்சேரி முன் திரண்டிருந்தனர். ஆண்கள் மட்டுமல்ல பெண்களே கச்சேரி முன் மறியல் செய்வதற்கு இடமில்லாதபடி ஏராளமான பெண்கள் வந்திருந்தனர். தீவுப்பகுதி எம். பி.யின் தலைமையில் நடைபெற்ற மறியல் இயக்கத்தில் தீவுப் பகுதிகளிலிருந்து ஆண்களும் பெண்களும் திரளாக வந்திருந்தனர்.

தீவுப்பகுதியில் அன்று கடைகள் யாவும் பூட்டப்பட்டிருந்தன. கறுப்புக் கொடிகள் பறந்து கொண்டிருந்தன.

இதன் பின் மானவர்கள் கைகளைச் சங்கிலியால் பிணைத்து வாய் கட்டி அமைதியுடன் ஊர்வலமாக வந்துசேர்ந்தனர்.

பிற்பகலில் வர்த்தக ஊழியர் ஒரு புறமும் மாதர்களின் ஊர்வலம் மறுபுறமும் கச்சேரியை வந்தடைந்தன.

மாலையில் நாவாந்துறை, கொழும்புத்துறை, குருநகர் ஆகிய இடங்களிலுள்ளவர்களும் மற்றும் கத்தோலிக்க மக்களும் கிறிஸ்தவ கீதங்கள் இசைத்தபடி ஊர்வலமாக வந்து சேர்ந்தனர். சுலோகங்கள் எழுதப்பட்டஅட்டைகளுடனும் கறுத்தக் கொடிகளுடனும் வந்து சேர்ந்த இந்த ஊர்வலத்தின் முன்னே யாழ்ப்பாணம் எம். பி. திரு. அல்பிரட் துரையப்பா, பருத்தித்துறை எம். பி. திரு. க. துரைரத்தினம், யாழ்ப்பாண மாநகரசபை அங்கத்தவர்கள் திரு. ஏ. ஜி. இராஜகுரியர், திரு. எம். ஜேக்கப் ஆகியோர் வந்தனர். மூன்று மைல் நீளமான இந்த ஊர்வலம் கச்சேரியை அடைந்ததும் பெண்கள் மட்டுமே அங்கு உட்காருவதற்கு இடவசதி கிடைத்தது. சுமார் இரண்டு மணி நேரம் அமைதியாக உட்கார்ந்து பக்திப் பாடல்கள் பாடினர்.

இந்த ஊர்வலத்தை முன்னின்று ஒழுங்குசெய்த குருநகர் கடல் தொழிலாளர், தலைவர் திரு. செல்வநாயகத்திடம் பணமுடிப்பொன்றை வழங்கினர்.

சென்ற சனிக்கிழமை கடல் தொழிலாளர் தொழிலுக்குப் போகவில்லை. தோணிகள், படகுகள், வள்ளங்கள் யாவும் கரையிலே கறுப்புக் கொடிகளைக் காட்சியளித்தன.

நிர்மாண நிட்டத்தை

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

றியின் உதயமாக இருக்கலாம். அது பிரசவ வேதனையாகவும் இருக்கக்கூடும்.

* * *

நாள் தோறும் கொடும் வெயிலில் உட்கார்ந்திருப்பதன் அசௌகரியத்தை நீங்கள் உணரமாட்டீர்கள். குறிக்கோளிலும் மார்க்கத்திலும் கடவுளிடமும் உங்களுக்கு நம்பிக்கை இருந்தால், வெப்பம் பொருந்திய வெயில் உங்களுக்குக் குளிர்ச்சியாகவே இருக்கும். நீங்கள் களைப்படைந்து "எவ்வளவு காலம் இவ்வாறு இருப்பது" என்று கூறிவிடக் கூடாது.

* * *

நமது மதத்தில் பெரும் ஊழல் பிறந்துவிட்டது. தேசிய ரீதியாக நாம் சோம்பேறிகளாய் விட்டோம். நமது செயல்களில் சுயநலம்தான் பிரதானமாக இருக்கிறது. நம்மில் உயர்ந்தவர்களுக்கிடையே கூட ஒருவருக்கொருவர் பொறுமை இருக்கிறது. நாம் ஒருவருக்கொருவர் தர்ம உணர்ச்சியின்றி நடந்து கொள்ளுகிறோம்.

சத்தியாக்கிரகம் என்பது இடைவிடாத முயற்சியுடன் சத்தியத்தைத் தேடி அடைய உறுதிகொள்வதாகும். இதனை உணர்ந்துவிட்டால், உங்களுடைய துயரங்களில் எல்லாம் நீங்கள் மகிழ்ச்சி கொள்வீர்கள். மற்றவர்களெல்லாம் விரக்தி அடைந்திருக்கும்போது நம்பிக்கையுடன் சிரிப்பீர்கள். அப்போது உங்களுடையவேலை எளிதாகிவிடும்.

மத நூல்களில் ரிஷிகளும் கவிஞர்களும் அளித்துள்ள உதாரணங்களில் எனக்கு நம்பிக்கையுண்டு. உதாரணமாக சுதன்வர், தன்னைக் கொதிக்கும் எண்ணெயில் அமிழ்த்தியபோது சிரித்துக்கொண்டிருந்தார் என்பது எழுத்துக்கெழுத்து உண்மையாக இருக்குமென நான் நம்புகிறேன். ஏனெனில் அவரைப் பொறுத்தவரை, கொதிக்கும் எண்ணெயில் மூழ்குவதைக்காட்டிலும், தன்னைப் படைத்தவனை மறப்பது அவருக்குப் பெரும் சித்திரவதையாகும். சுதன்வருக்கு இருந்த நம்பிக்கையில் ஒரு சிறு அணுவளவாவது நமக்கு இருந்தால் நாம் எளிதில் வெற்றியடையலாம்.

ஊர்வலத்தில் அமைதி, கட்டுப்பாடு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அக்கறை காட்டி வருகிறார்களென்பதை அவர்கள் கலந்து கொள்ளும் தொகையிலிருந்து அறிந்து கொள்ளக் கூடியதாயிருக்கின்றது. அலங்காரங்களைக் குறைத்து காலணியுமின்றி தாய்மார் நெருப்பு வெயிலில் சென்ற காட்சி நெஞ்சை உருக்குவதாக இருந்தது.

தொண்டர்கள் கூட்டம்கூடி வருவதால் கச்சேரி வாசலில் அதிக நேரம் அவர்கள் தொடர்ந்து சத்தியாக்கிரகம் செய்ய முடியாது போய்விடுகின்றது.

தொண்டர்அதிகரிக்கும்நேரத்தில்மூறையாக இருக்கச் செய்யவும் செல்வதற்கு வழி கொடுக்கவும் உடையணிந்த தொண்டர்கள் ஆற்றிவரும் சேவை ஒழுங்கையும் கட்டுப்பாட்டை நிலைநாட்டுவதாகஇருக்கின்றது

2-வது மாத ஆரம்பம்

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

சட்ட மறுப்பும் இப்பொழுது இல்லை

யாழ்ப்பாணத்தில் சத்தியாக்கிரக இயக்கம் ஆரம்பமாகி இன்றுடன் சரியாக ஒரு மாதம் முடிவடைகிறது. ஒரு மாத காலமும் யாழ்ப்பாணம் கச்சேரியில் நிர்வாக அலுவல்கள் நடைபெறவில்லை. இதர பல அரசாங்கக் காரியாலயங்கள் முன்னும் சத்தியாக்கிரகம் நடைபெறுவதால் அவையும் சில வாரங்களாக இயங்கவில்லை.

யாழ்ப்பாணத்தில் சத்தியாக்கிரக இயக்கம் ஆரம்பமான இரண்டாவது மாதத்தில் சட்ட மறுப்பு நடவடிக்கைகளையும் மேற்கொள்வதென்று தமிழரசுக் கட்சி செயல் குழு தீர்மானித்திருந்தது. ஆனால் இப்பொழுதுள்ள நிலையில் லண்டனிலிருந்து திரும்பும் பிரதமர் எடுக்கும் நடவடிக்கையைப் பொறுத்தே சட்ட மறுப்பு நடவடிக்கைகளை ஆரம்பிப்பதென்று முடிவு செய்திருப்பதாகவும் தெரிகிறது

திருக்கோணமலையில் சத்தியாக்கிரக நிலைமையைப் பார்வையிடுவதற்காகச் சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினமும், கிளிநொச்சி எம். பி. திரு. ரி. சிவசுந்தரமும் அங்கு சென்றுள்ளனர்.

ஐயாறன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்து மாணவர்களின் ஊர்வலம் ஆரம்பமாகியது. ஊர்வலம் ஆரம்பமாகிய புனிதம் என்ற சொல்லின் விளக்கம் அவ்வூர்வலம். பாடிக் கொண்டிருந்த சத்தியாக்கிரகிகள் உட்பட, குழுமியிருந்தோர் அனைவரும் மௌனமாயினர். இருந்தோர் எழுந்தனர், கைகளைக் கட்டினர்.

சோகமே உருவாகக் கைகளைச் சங்கிலியால் பிணித்துக் கட்டிக் கொண்டு மௌனமாக குனிந்த தலையுடன் அவர்கள் தாய்மார்களை வணங்கினர். எனக்கே கண்களில் நீர் மல்கியது. அன்னைமாருக்கு எப்படி இருந்திருக்க வேண்டும்.

'மக்களே, இந்த அடிமைத் தளையை அன்னைகளாகிய நாங்களே அறுப்போம்' என்று கூறுவது போல் திருமதி அமிர்தலிங்கமும், சூழ்ந்திருந்த அன்னைமாரும் வீரகோஷமிட்டார்கள்.

'சட்டமெனும் சங்கிலியால் கட்டிடுவோமோ.'

இத்தகைய சிறுவர்கள் இருக்கும்வரை நாடு நலம் பெறும் என்பது நிச்சயம்.

கச்சேரிக்கு வந்து அரிசி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கிட்டரிசி பெறுவதென்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கச்சேரிக்குள் சென்று பங்கீட்டரிசி பெறுவதற்கான அனுமதிச்சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ளாமலேயே பங்கீட்டரிசி விநியோகிப்பதற்கான வழியிருக்க, தமிழ் மக்களின் ஒற்றுமையைக் குலைக்கவும் அவர்களைப் பிரிக்கவும் பங்கீட்டரிசி விநியோகத்தை தமிழ் மக்களின் உரிமை இயக்கத்துக்கு எதிராக உபயோகிக்கவும் அரசாங்க அதிபரின் சுற்றறிக்கை முயற்சி செய்கிறது" என்று கண்டனத் தீர்மானம் ஒன்றும் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேறியது.

செயற்குழு நியமனம்

திரு க. கனகசபை தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் இத் தீர்மானங்களுக்கமைய நடவடிக்கைகள் எடுப்பதற்கு செயற்குழுவொன்றும் தெரிவு செய்யப்பெற்றது.

கடையடைப்பும் ஊர்வலமும்

இம்மாதம் 24ந் திகதி வெள்ளிக்கிழமை கடையடைப்புச் செய்து ஊர்வலம் நடத்துவதென்றும் கூட்டத்தில் முடிவு செய்யப்பெற்றது.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபருக்கும் யாழ்ப்பாண நகர மேயருக்கும் தந்திமூலம் அறிவிக்கப்பட்டது.

பிரதமர் சிறிமா பதில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒதுக்கல் பிரச்சினை எதுவுமில்லையெனவும், மொழிச் சிக்கலே இலங்கையில் இருந்து வருகின்றதெனவும் கூறினர். அவர் மேலும் தெரிவித்ததாவது

பார்லிமெண்டில் அங்கத்துவம் பெறுவதற்குத் தமிழர் தமது நிறத்தை மாற்றிக் கொள்ளவேண்டியதில்லை. இலங்கையில் ஒரு மொழியே எதிர்காலத்தில் அரசகரும மொழியாக இருக்கவேண்டுமென்பது அரசாங்கத்தின் தீர்மானமாகும். அத்துடன் சிங்களம் தெரியாத இன்றைய தமிழ் மக்களின் உரிமைகளும் பாதுகாக்கப்படுகின்றன. தமிழ்ப் பிள்ளைகள் தங்கள் தமிழ்மொழி மூலம் கல்வி பயிலும் உரிமை பெற்றிருக்கின்றனர்.

சிங்களத்தைப்போலவே தமிழுக்கும் சம உரிமை அளிக்கவேண்டுமெனத் தமிழரில் ஒரு சாரார் கேட்கின்றனர். சம சமாஜிகள், கம்யூனிஸ்டுகள் இந்தக் கோரிக்கையை ஆதரித்து நிற்கின்றனர். தமிழரிற் சிலர் சமஷ்டி ஆட்சியை விரும்பி நிற்கின்றனர்.

இலங்கை போன்ற ஒரு சிறிய நாட்டுக்கு சமஷ்டி ஆட்சி முறை உகந்ததன்று. தவிர இவ்வாட்சிமுறை பெரிய சிக்கல்களையும் உண்டாக்கிவிடும்.

1958-ல் நடைபெற்ற போராட்டத்தைச் சில தீவிரவாதிகள் தூண்டிவிட்டனர். இருந்தும் அரசாங்கம் நாட்டில் ஒழுங்கு முறையைப் பாரபட்சமின்றி நிலைநாட்டிற்று. தீவிரவாதிகள் சிங்களவரானாலும் சரி தமிழரானாலும் சரி, அரசாங்கம் அவர்களுக்குப் பாரபட்சம் காட்டவில்லை.

தமிழர் சிங்களத்தைப் பயில முன்வருவார்களானால் அவர்கள் உயர்ந்த பதவிகளை வகிக்க முடியும். இப்போதும் அவர்கள் மதிப்பான பதவிகளை அரசாங்கத்தில் வகித்துவருகின்றனர். பார்லிமெண்டில் இன்று 20 தமிழ் எம். பி.க்களும் சில மூலிம்களும் இருக்கின்றனர். இவர்கள் எல்லாரும் சிறுபான்மை வகுப்பினரே.

Choice

of

FOR BUILDING CONSTRUCTION OR ROADWAYS

Cement



IN INDUSTRY AND BRIDGE MAKING

in every field

Dalmia CEMENT

the better make for better construction

DALMIA CEMENT (BHARAT) LTD.
DALMIAPURAM (TIRUCHIRAPALLI)

ஏக விநியோகஸ்தர்கள்:

செட்டிநாட் கார்ப்பரேஷன் (பிரைவேட்) லிமிட்டெட்

116/118 கெய்சர் வீதி, : : கொழும்பு:

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1961-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 20-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.